*Editor's Note*

Please address all communication for the English pages to The English Editor, 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 19TH DECEMBER, 1980 No. 51

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Seasons Greetings*

O, come to us,
abide with us
Our Lord Emmanuel

## Yet Another Award for Ecumenical Pioneer

His Eminence Juvenaly, representing His Holiness Pimen Patriarch of Moscow and all Russia has decorated Dr. Visser t' Hooft, with the *Order of Saint Sergius,* describing him as a "godfather" of the ecumenical movement within the thousand year old Russian Orthodox Church that joined the WCC in 1961.

Two years after he retired in 1966, Dr. Visser t' Hooft was elected Honorary President of the World Council of Churches. A unique ecumenical figure, he has written enough articles' and books on subiects from theology to art to fill a 165 page bibliography published ten years ago as part of a "Festschrift" in his honour.

Dr. Visser t' Hooft celebrated his 80th Birthday on 17-8-80.

## P. Q. L. Index of Sri Lanka

In his address to the 171st Annual Meeting of the United Church Board for World Ministries on the 9th of November, 1980 at Reading, Pennsylvaniya, the Rev. Dr. David M. Stowe made the following reference to the Physical Quality of Life Index (P.Q L.I.) of some developing countries.

Three of the most crucial measurements of physical well being according to a U. S. Overseas Development Council are infant mortality, life expectancy at age 1 and literacy. These factors go to measure the physical quality of fife index (P. Q. L. I.). The extremely important finding of that index is that relatively low per capita incomes can still promote and support relatively high levels of physical well being if the right health and food and educational policies and programmes are implemented.

**Sri Lanka, Outstanding Example**

Dr. Stowe referred to the outstanding example of a high P. Q. L. Index being achieved on the basis of a very low economic level is Sri Lanka. The per capita annual income of Sri Lanka is only $ 179/- very small compared to nations of even modest development. Its P. Q. L. I. is 81 on a scale of 100 comparable to that of many countries with per capita annual incomes ten times that of Sri Lanka.

Other P. Q. L. I. figures of interest are, 32 countries show ratings of 30 - clear signals of absolute poverty. 28 of these are in Africa. There are 40 more countries that rate between 31 and 60 and most of these are in South and South East Asia or the Middle East. U. S. A. rates 94 topped by Canada, Japan and the small wealthy North European countries with Sweden highest at 97.

*A Message for Christmas*

## "THE IMAGE OF THE INVISIBLE GOD" — *Col. 1 : 15*

"Thou shalt not make unto thee any graven image", the second Commandment in the decalogue has been a puzzle to many religious people who are not heirs to the Judaeo-Christian tradition. Images and idols have been part and parcel of most ancient religious and civilisations. They are the product of man's striving to conceive of the supernatural or the divine in some concrete form. Images and idols provided some kind of certainly about the presence of a people's god in their midst. They gave them some sense of assurance and security. The idol was considered as a representation of the divine which had some form of compelling power. Incidentally this also gave rise to fine works of arts and sculpture. The Hebrews however, ridiculed all this. They looked with scorn at those who would make them, "they that make them are like unto them" ......Ps. 115 : 51. The Prophet constantly carried on a polemic against all forms of idolatry. One of the best known such passages is in Is. 46, where the prophet visualises a familiar temple procession where the idol is ceremoniously carried. He pointedly draws the contrast between "the gods that must be carried and the God who carries us". The God of Israel they affirmed is a living God, not an idol that having a mouth cannot speak or having eyes cannot see. He is the creator of the universe not idols of silver and gold, the work of men's hands" (Ps. 115 : 4). It is to Hebrews who had such a lofty conception of God there came the first Christmas message of the birth of the Saviour, the birth of a child who shall be called, Immanuel, God with us. The Creator himself took the form of a creature, the invisible one became visible in flesh and blood. Chrismas is the message of God's loving humility, "being found in Fashion as a man", a humility in which he sought the fellowship of sinful men. It is the message of God's loving revelation of himself, as the God who sees man's pitiable plight, hears man's cry and will speak to him as a man speaks to his friend. It is the revelation of his nature as self-giving love. As Immanuel He is the true ground of our assurance, certainly and security.

As we celebrate again this Great act of God this Christmas tide we are invited to look beyond the blinding illuminations and sparkling tinsels of modern technology, into the dark world in which the Light shone, the sinful world into which He brought the grace of forgiveness, the world of strifes and conflicts into which He came as the Prince of Peace. Soren Kierkegaard commented on the Angel's song, "Unto you is born this day a Saviour; and yet it was night when the Saviour was born. It must be night and it becomes day in the middle of the night when the Saviour is born.". The darkness of night is still so much around us. May our celebration of Christmas be a means of witnessing to that Saviour whose birth brings day in the middle of the night, the Saviour who is the image of the invisible God - Immanuel. God with us.

**The Rt. Rev. D. J. Ambalavanar**

## Christmas Snippets

**Truth in Giving :-** A little girl brought home a note from Sunday School asking the family to contribute an item of food to fill Christmas baskets for the needy.

Scanning the pantry shelves, the mother suggested "you can take these cans of mustard sardines which none of us liked".

The girl's face fell. "But that means the poor people are helping us".

**The First Christmas Card :-** It was in *1843* that *Sir Henry Cole,* a Director of the British Museum realised that he had so long delayed writing his letters of Christmas greetings that he could get them done in time to be delivered on the same day.

So he commissioned a Royal academician, John Horseley to design him a card which he could send in bulk. Thus, a great industry was born. Horseley's card showed a family at table toasting absent friends.

## ANOTHER CHRISTMAS STORY

**by Malcolm Fernando**

'Gramma' as she was so popularly known to all, looked unusally ruffled as she sat by the comforting log-fire that Christmas night. She carried her 90 plus frail structure with dignity, but tonight she seemed to have paled; it could not be the cold, she had been through many such nights. The sound of music and laughter drifted upstairs as her children, grand - children and friends were getting ready for customary Christmas night celebrations on the floor below where a beautifully decorated Christmas Tree with fancy packages of goodies for young and old, delicious eats and drinks awaited their ultimate fate.

They waited impatiently for the 'Emcee' who, of course, was Grandma, but there was no sign of her. Six year old Pat could wait no longer. She tiptoed upstairs and was awestruck by Gramma who looked with nonchallence towards the burning coals of the fire, a few tears trickling down her weathered cheeks. As if by instinct she said, "Sit down child, I have an exciting story to tell you.

"It was a cold, wintry night such as this" she began, "when your Grandpa was entertaining guests at a Christmas dinner—a special banquet for favourite clients of the Inn he kept. In the midst of the buzzling gaity, a poorly looking man knocked at the door and asked if he could have shelter for himself and his shivering wife for the night. It was outlandish to have such peasants where our wealthy, distinguished friends had gathered. "Go round and see if you can find room in one of the outhouses" we told him.

Grama shed more tears and continued. "Much later we were to know we had refused shelter and turned away the carpenter Joseph and his wife Mary to whom that night was born the KING OF KINGS, PRINCE OF PRINCE, WISE COUNSELLOR, CHRIST JESUS — born in the manger of our stable because we had refused the parents a night's rest".

"What a difference it would have made to our home that night. Ever since that night, Christmas to me has beeu in the silence of the recesses of my soul"

Pat walked downstairs and sadly repeated the story to a muted gathering of brothers, sisters, cousins, parents, uncles, aunts and friends. Pappa donned a Santa Claus outfit, uncle Ben hefted the Christmas Tree, and out walked the enlightened Christmas revellers, seeking the poor and the lonely people and children in the neighbourhood to share the poverty of the poor, to share their Christmas fare with the needy.

So this Christmas little children, gether round your lovig Pappas and Mammas, tell them this story and share what you can with those who cannot afford even bare necessities.

"REMEMBER TO SHOW HOSPITALITY. THERE ARE SOME WHO BY SO DOING, HAVE UNKNOWINGLY ENTERTAINED ANGELS"

Hebrews

## Diocesan Office

J. D., C. S. I. Treasurer's Office will be closed for Business from 24th of December, 1980 to 1st of January 1981.

( Both days inclusive )

**S. S. Selvdurai**
*Hony. Treasurer, JDCSI*

*IN BRIEF*

- *The Director General of OPEC,* Dr. Ibrahim Shihata, will visit Sri Lanka on 13-1-81 on an invitation by the Minister of Finance.
- *There will be a Separate Certificate* for vocational and Technical Studies in the G.C.E. ( Ordinary Level ).

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

பிரமாணத்தைக் கைவிடுவோர் துஷ்டரைப் புகழ்வார்கள், பிரமாணத்தைக் கைக்கொள்ளுவோர் அவர்களுக்கு எதிர்த்து நிற்பார்கள்.
— நீதி 28 : 4.


மலர் 140 ] 19 — 12 — 1980 [ இதழ் 51


## வரலாற்றின் நாயகன்

இஸ்ரவேல் ஜனங்கள் இறைவனை வரலாற்றின் நாயகனாகவே கண்டார்கள். உலகத்தின் சரித்திர சம்பவங்களையும், காலங்களையும் நிர்ணயம் செய்பவர் அவரே என்பது அவர்களது திடமான நம்பிக்கை. எகிப்திலிருந்து தமக்கு அதிசயமாய் விடுதலையளித்த அவரே உலகம் முழுவதற்கும் அதிபதியாக இருக்கிறார் என்று அவர்கள் அறிக்கை செய்தனர்.

இறைவன் இஸ்ரவேலருக்கு முன்பாக மட்டுமன்றித் தம்மை நம்பியிருக்கின்ற எல்லாருக்கும் முன்பாகவும் நடந்து போகின்றவராக இருக்கின்றார். நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும், மாதங்கள் வருடங்களாகவும் உருண்டோடுகின்றன. புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கு முன் பலருக்கும் பலவிதமான ஏக்கங்கள். புதிய வருடத்தில் விலைவாசிகள் எப்படியிருக்குமோ, போக்குவரத்து வசதிகள் எப்படியாகுமோ, பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் என்னவாகுமோ, திருமணமாகாத பெண்பிள்ளைகளின் நிலை என்னவாகுமோ என்று அவர்கள் அங்கலாய்த்து நிற்கின்றனர்.

இவ்வாறான ஏக்கம் மூவாயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன்னர் ஒரு பக்தனுக்கு ஏற்பட்டது. அவர்தான் இஸ்ரவேலரை இன்பக்கானான் அடைய அழைத்துச் சென்ற மோசே முனிவராவர். பார்வோனுடன் வாதிட்டு, வாதைகளை நடப்பித்து, இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பைச் சகித்துச் சீனாய் மலைவரை இஸ்ரவேல் ஜனங்களை அழைத்து வந்த மோசே முனிவருக்கு ஏக்கம் பிடித்துக்கொண்டது. தமக்கு முன்பாக இருந்த பாதையை எண்ணிக் கலங்கினார். மக்களின் முறுமுறுப்பு, தண்ணீர்க் கஷ்டம், உணவுக் கஷ்டம், கள்வர் தொல்லை, வனாந்தர விஷ ஜந்துக்களின் கஷ்டம், தொற்றுநோய்க் கொடுமை எல்லாமே அவரை ஏங்க வைத்தன. எனவேதான் மோசே முனிவர் சீனாய் மலையிலே இறைவனைச் சந்தித்தபொழுது, "உமது கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால் உமது வழிகளை எனக்கு அறிவித்தருளும்" என்று இரந்து கேட்டார்.

மோசே முனிவரின் இந்தக் கோரிக்கைக்கு இறைவன் செவி சாய்க்கவில்லை. அவருடைய கேள்விக்கு மறுமொழியாக, "என் சமுகம் உன்னோடு கூட வரும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றார்.

மோசே முனிவருக்கு அந்த வாக்குத்தத்தம் போதுமாய் இருந்தது. இறைவன் கடந்த காலங்களில் தனக்குச் செய்த நன்மைகளை அவர் அறிந்திருந்தார். புதிய பாதை கடினமாக இருக்கப் போகிறதென்பது நிச்சயம். ஆனால் அந்தப் பாதை எப்படியானது என்பதனை இறைவன் தமக்குத் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் அவர் சமுகம் கூட இருந்தால் எத்தகைய கரடுமுரடான பாதையும் மிருதுவான பாதையாகப் போய்விடும் என்பதனை அறிந்திருந்தார். எனவேதான் இறைவன் அருளிய வாக்குத்தத்திற்குப் பிரதியுத்திரமாக, "உம்முடைய சமுகம் கூடவந்தாலொழிய எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்" என்றார்.

இறைவன் உலகத்தின் வரலாற்றை நிர்ணயிப்பவர் மாத்திரமன்றி, ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்வையும் நிர்ணயம் செய்பவராக இருக்கின்றார். நமக்கு முன்பாக இருக்கும் காலங்கள் எப்படிப்பட்டதென நாம் அறியோம்; சிலர் அவற்றை அறிந்துகொள்ள சோதிடர்களிடமும் சாதகம் கணிப்பவர்களிடமும் ஓடுகின்றார்கள். இறைவனோ அவை உங்களுக்கு அவசியமில்லை என்கிறார். என் வழிகளை அறிய முடியாது. ஆனால் என் சமுகம் உன்னோடு கூட வரும் என்ற வாக்குத்தத்தத்தினை அருளுகின்றார். புதிய வருடத்தில் காலடி எடுத்துவைக்கும் நாம், "உம்முடைய சமுகம் கூட வந்தாலொழிய எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்" என்று வேண்டுதல் செய்வோமாகா.

---

செய்திச் சிதறல்

### பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகம் தமது புதிய நிர்வாக சபையை சென்ற மாதம் இருபத்தோராம் திகதி தெரிவு செய்தனர். இவ்வருடம் கலைத் துறையினருக்கும் ஏனைய துறையினருக்குமிடையில் கடும் போட்டி நிலவியதாகத் தெரிகின்றது. இதுவரை காலமும் கலைத்துறை மாணவர்களே நிர்வாக சபையில் முக்கியமான பதவிகளை வகித்து வந்தனர். இவ்வருடம் ஏனைய துறை மாணவர்கள் சகல போட்டிகளிலும் வெற்றி பெற்றனர். தேர்தல் முடிவுகள் பின்வருமாறு: தலைவர்: கி. செல்வராசா (பொறியியல் மாணவர்), உபதலைவர்: அ. முருகானந்தா (விவசாயத் துறை மாணவர்), செயலாளர்: ந. சண்முகப்பிரபு (விவசாயத் துறை மாணவர்), பொருளாளர்: வி. விஜயகுமாரன் (பல் வைத்திய மாணவர்), பத்திராதிபர்: பூ. காசிநாதன் (மிருக வைத்திய மாணவர்).

### பேராதனைப் பல்கலைக்கழகம் தனிநாயக அடிகளாருக்கு அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழகம், பிலிமத்தலாவை இறையியற் கல்லூரித் தமிழ்க் கழகம், அம்பிட்டிய ஞானப்பிரகாசர் கழகம் என்பனவற்றுடன் இணைந்து இம்மாதம் "தனிநாயக அடிகளார் அஞ்சலிப் பெருவிழா" ஒன்றினை எடுத்தது. இவ்விழாவிற்குப் பேராதனைத் தமிழ்ச் சங்கத் தலைவர் தலைமை வகித்தார். தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அறிமுகவுரை வழங்கினார். பொருளியல் விரிவுரையாளர் ஆ. சிவராசா அடிகளாரின் சேவையை விளக்கினார். பிலிமத்தலாவை இறையியற் கல்லூரி அதிபர் வண. டொனல்ட் கனகரத்தினம், தமிழின் பெருமையை உலகுக்குணர்த்தியவர் தனிநாயக அடிகளார் என்று குறிப்பிட்டார். வண. பிதா ஜோசப் மேரி அடிகளார் தமிழ் வித்தகர்கள் பலர் முன்னர் தோன்றியிருந்தபொழுதும், பல துறைகளையும் ஒன்று சேர்த்து, உலக அரங்கில் ஒரு தமிழ் ஆராய்ச்சியை ஆரம்பித்து வைத்த பெருமை தனிநாயக அடிகளுக்கே உரியது என்று குறிப்பிட்டார். தமிழ்ச் சங்கச் செயலர் ந. சண்முகப்பிரபு நன்றிக் கவிதை வழங்கினார்.

### அலை விமரிசனம்

"அலை" பத்திரிகையின் விமரிசனக் கூட்டம் சென்ற வியாழக்கிழமை "பொன்ட்" நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் திரு. ஆ. சபாரத்தினம் தலைமை வகித்தார். அவர் தமது உரையில், "சிலரால் அசத்தியத்தை, குறைகளை, போலிகளைச் சகிக்கமுடியாது; வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குப் போய் விடுவார்கள். மந்தமதி படைத்தோர் அதிகம் அறிந்ததாகக் காட்டிக்கொண்டால், நுனிப்புல் மேய்வோர் எல்லாம் அறிந்தவர்கள்போற் காட்டிக்கொண்டால், அவர்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். "அலை" வட்டத்தில் அப்படிப் பட்டவர்கள் அநேகர் உண்டு" என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் விமரிசன உரையை எழுத்தாளர் திரு. நந்தினி சேவியர் நிகழ்த்தினார். கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் திரு. நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், ஜனாப் நுஃமான், திரு. செ. மௌனகுரு, திரு. முத்துலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். "அலையின்" இணையாசிரியர்கள் திரு. அ. யேசுராசா, திரு. மு. புஷ்பராஜன் ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

### காரைநகரில் மணிவாசகர் விழா

காரைநகர் சிவன் கோவிலில் மணிவாசகர் விழா இம்மாதம் 19-ம், 20-ம் 21-ம், 22-ம் திகதிகளில் நடைபெற்றது. முதல்நாள் நிகழ்ச்சியில் "பாவையர்க்கோர் பாவை" என்னும் பொருள்பற்றி திருமதி வஸந்தா வைத்தியநாதனும், "என்கொண்டெழுகேன்" என்னும் பொருள்பற்றி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விஞ்ஞானமூர்த்தியும் சொற்பொழிவாற்றினர்.

மறுமைப் பிரவேசம்

### R. O. பியூவல்

இலங்கை Y. M. C. A. நிறுவனத்துக்கு 48 வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்தவரும், தேசிய Y. M. C. A. யின் செயலாளராகப் பல்லாண்டு பணியாற்றியவரும், காலஞ்சென்ற ரோஸ் அவர்களின் கணவனும், புஷ்பமணி (திருமதி S. குமாரசுவாமி), சாம், லீலாமணி, காலஞ்சென்ற டேவிட், தேவா, மேரி, (திருமதி J. C. ஜேக்கப்) பென்ஜமின் ஆகியோரின் தந்தையுமாகிய றொபேட் O. பியூவல் மறுமை யெய்தினர். அன்னாரின் பிரேத சேமாராதனை கொள்ளுப்பிட்டி, சாள்ஸ் ட்றைவிலுள்ள அவரது இல்லத்தில் 11-12-80 காலை 9 மணிக்கு நடைபெற்றது. கனத்தைச் சேமக்காலையில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடன் பூதவுடல் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

* * *

### M. ஜேக்கப்

நவாலித் திருச்சபையைச் சேர்ந்த M. ஜேக்கப் அவர்கள் 2-12-80 செவ்வாய்க்கிழமை மறுமைக்குள் பிரவேசித்தனர். அன்னார் காலஞ்சென்ற அன்னா ஜேக்கப் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி செல்லையா, திரு. J. B. அருமைநாயகம், திரு. J. செல்வநாயகம், திரு. J. கிருபைநாயகம், திரு. J. சத்தியநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பிரேத சேம ஆராதனை நவாலியிலுள்ள அவரில்லத்தில் வண. S. P. ஜெயசிங்கம் அவர்களினால் வண. சாம். தம்பு அவர்களின் உதவியுடனும் வண. சாம். அல்பிரட்டின் உதவியுடனும் நடத்தப்பட்டது. நல்லடக்கம் நவாலி சேமக்காலையில் வண. S. P. ஜெயசிங்கம் அவர்களினால் நடத்தப்பட்டது.

---

### மக்கள் கடை திறப்பு விழா

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடை யாழ். முதல்வர் இராஜா விசுவநாதன் அவர்களினால் சனிக்கிழமை (13-12-80) மாலை 5.00 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. இங்கே பொலித்தீன் பைக்கற்றில் அடைக்கப்பட்ட பொருட்கள், நத்தார் பண்டிகைக்குரிய பொருட்கள், மகளிர் குழு உற்பத்திப் பொருட்கள் முதலியன விற்பனை செய்யப்படும் எனத் தெரிகின்றது.

### ஊழியருக்குப் பிரியாவிடை

சென்ற சனிக்கிழமை (13-12-80) மாலை 4 மணிக்கு ஜெனிவாவிலுள்ள உலக திருச்சபை மன்றின் ஆசியப் பிரதிநிதியாகப் பதவியேற்றுச் செல்லும் அருள்திரு. S. W. அரியராசாவுக்கும் பாரியாருக்கும் யாழ். பரி. பேதுரு ஆலயத்தினரால் றிம்மர் மண்டபத்தில் ஒரு பிரிவுபசாரம் நடத்தப்பட்டது. அருள்திரு சாம் ஹோஷிங்ரன், அருள்திரு. சாம் அல்விறெட் ஆகியோர் செபங்களை நடத்தினர். தெ. இ. திருச்சபை அத்தியட்சர் அருள்பெருந்திரு. D. J. அம்பலவாணர், கத்தோலிக் திருச்சபைக் குரவர் வண. பிதா மைக்கேல் சுவாமி, மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த திரு. J. G. அரசரட்ணம் முதலியோர் அருள்திரு. அரியராசாவின் மதிநுட்பத்தையும் ஆற்றலையும் பாராட்டினர். அருள்திரு. அரியராசா நன்றி தெரிவித்தனர்.

# இறைவனுக்கு நமது காணிக்கை அவசியமா?

— T. S. பிரேமராஜா —

இக்கேள்விக்குப் பதிலளிக்க வேதாகமம் உதவும். பக்தியுள்ள இஸ்ரவேல் மக்கள் மூன்று வழியில் இறைவனுக்குக் கொடுத்தார்கள்.

(1) இறைவனை ஆராதிக்கக் கொடுத்தார்கள். இஸ்ரவேல் மக்கள் முன்பு ஆசரிப்புக் கூடாரத்திலும் பின்பு தேவாலயத்திலும் இறைவனை ஆராதித்தார்கள். வணக்க ஸ்தலத்தைத் தாபரிக்க மனமுவந்து அளித்தார்கள். அதன் வழிபாட்டுக்குத் தேவையான பொருட்களையும் பணத்தையும் கொடுத்தார்கள்.

2. இறைவனுடைய ஊழியருக்குக் கொடுத்தார்கள். ஆசாரியரும், லேவியரும் தம்மை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்தவர்கள். இவர்களின் சேவைக்காக ஒவ்வோர் இஸ்ரவேல் மகனும் மகளும் தம் பங்கை அளிக்கவேண்டும்.

3. வறியோருக்குக் கொடுத்தார்கள். ஒவ்வொரு பண்டிகையிலும் அனாதைகள், விதவைகள், திக்கற்றவர்கள், வறியோர் யாவருக்கும் தம் பங்கை அளிக்க வேண்டும்.

இவை யாவும் இஸ்ரவேல் மக்களுக்கு இறைவனின் கட்டளைகள் ஆனால் கிறிஸ்தவர்களுக்கு இக்கட்டளைகள் எவ்வாறு பொருந்தும்?

கிறிஸ்தவர்களுக்கும் "இறைவனுக்குக் கொடுக்கும்" விடயத்தில் மூன்று நோக்கங்கள் உண்டு.

(1) இறைவனை ஆராதிக்கவும், அவரின் ஊழியத்தை தாபரிக்கவும் நாம் கொடுக்க வேண்டும். இவ்விடயத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆலய தாபரிப்புக்கும் வழிபாட்டுத் தேவைகளுக்கும், ஆசாரிய ஊழியத்தைச் செய்தவர்களுக்கும் கொடுத்ததுபோல், கிறிஸ்தவர்களும் மேற்கூறிய நோக்கங்களுக்காக இறைவனுக்குக் கொடுக்க வேண்டும்.

2. வறியோருக்கு நாம் கொடுக்க வேண்டும். வறியோர் எப்பொழுதும் நம் மத்தியில் இருக்கிறார்கள். குறிப்பாக இரக்க கொடைகளாக (Charity) வறியோரைக் காணும்போது கொடுப்பதிலும் பார்க்க வறியோர் தம் நிலையிலிருந்து மீளவும், வளமான வாழ்வை அமைத்துக் கொள்ள கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும். இவ்வித ஈகை வறியோர் மீது காட்டும் அன்பின் ஆழத்துக்கு அடையாளம், "இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்றார் கிறிஸ்து.

3. நற்செய்திப் பணிக்குக் கொடுக்க வேண்டும். கிறிஸ்துவாகிய நற்செய்தியை எக்காலத்திலும் எல்லோருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே திருச்சபை இவ்வுலகத்தில் இருப்பதன் நோக்கம். கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் இவ்வூழியத்தைச் செய்ய கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும். நற்செய்தி அறிவிக்கும் முறைகள் பல. இவ்வூழியத்தை நிறைவேற்ற பணமாகவோ, பொருளாகவோ மட்டுமல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தம் பங்கைச் செய்ய இவ்வூழியத்தில் தாமாக ஈடுபட வேண்டும், ஈடுபடுதலும் இறைவனுக்குக் கொடுப்பதன் ஒரு பாகம்.

மேற்கூறிய மூன்று நோக்கங்களையும் கூறிய பின் "இறைவனுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்" என்ற கேள்விக்கு விடை என்ன?

மோசேயின் கட்டளைப்படி ஒவ்வொருவரின் வருமானத்தின் பத்தில் ஒரு பங்கைக் கொடுக்க கேட்கப்பட்டார்கள். இவ் வழக்கம் இயேசுவின் காலத்திலும் இருந்தது. இதைவிட் முதற் கனியையும் இறைவனுக்குக் கொடுக்க கேட்கப்பட்டனர். மேலும் ஒவ்வொருவரும் தன்னிஷ்டப்படி காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

இவற்றை நாம் கணக்கில் எடுக்கும்போது, இஸ்ரவேல் மக்கள் தம் வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கை இறைவனுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதற்கு நாம் ஒவ்வொருவரே விடையளிக்க வேண்டும்.

ஆனால் புதிய உடன்படிக்கை நியாயப் பிரமாணத்தின் உடன்படிக்கையாக அல்ல, அருளின் அல்லது கிருபையின் உடன்படிக்கையே. இங்கு தன்னிஷ்டமுள்ள கொடை முறையே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் இறைவனின் அன்பை கிறிஸ்துவின் மூலமாகப் பெற்று அனுபவித்த நாம், அவருடைய அன்புக்கு ஈடாக எவ்வளவு கொடுப்போம் அல்லது கொடுக்கவேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை ஆகவே கிறிஸ்தவர்கள் இறைவனுக்குக் கொடுக்கும் அளவிலிருந்து அவர்களின் ஆவிக்குரிய நிலையையும் கண்டுகொள்ளலாம். ஏனெனில், இறைவனிடமிருந்து எல்லாவற்றையும் பெற்ற நாம், அவருக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்பதிலிருந்து தெளிவாகும் அல்லவா.

---

## ஆராய்ச்சி மகாநாடு

அடுத்த மாதம் ஐந்தாம் திகதி மதுரையில் ஆரம்பமாகவிருக்கும் அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு இலங்கையிலிருந்து நாற்றியைம்பது பிரதிநிதிகள் செல்லவிருக்கின்றனர். இவர்கள் விமான மூலம் திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து பஸ் வண்டிகள் மூலம் மதுரை சென்றடைவார்கள் எனத் தெரிகிறது.

---

## பாலன் உணர்த்துவது

— அரசரடிக் கவிராயர் —

ஊரைவிட்டு வேறூர் சென்று
உவந்தே பிறந்த பாலன் நமக்கு
உணர்த்தும் நல்ல ஒப்புயர் கருத்து
"யாதும் ஊரே யாவரும் கேளிர்."

பாரைக் காக்கும் பாசங் கொண்டு
பனியால் வாட்டுங் குளிரில் பிறந்த
பாவ மீட்பன் பகரும் கருத்து
"எளிமை யதனால் ஏற்றங் காண்பீர்."

பெற்றோர் மகிழப் பிள்ளையாய் வந்து
பேசும் அன்பால் பேணி வளர்ந்த
பிதாவின் மைந்தன் பேசுங் கருத்து
"பெற்றோர் பெரியோர்க் கடங்கி வாழ்வீர்"

உற்றார் இல்லா ஒருதனி இடத்தில்
உலகை மீட்க உணவாய் வந்த
உறவாம் இறைவன் உணர்த்துங் கருத்து
"உலகில் உப்பாய் உணர்ந்து வாழ்வீர்."

## பாலன் பிறந்தான்

1. விந்தையாய் தூதர் வானில் வந்தனை செய்வதையே
சிந்தையில் ஏற்று நிற்போம் முந்தைநாள் விலையகல
மந்தைக் குடிலினிடை வந்தவ தரித்தாரே பாரும்
தந்தை அருகிருக்க கந்தையில் பொதித்தார் பாலன்.

2. அல்லல்சூழ் நல்லிருட்டில் தொல்லைகள் சூழும் காலம்
வல்லவன் பாலன் ஆனான் சொல்லுதே சோதிவழியை
நல்லவர் மூவர்கூடி நாடியே ஓடிச் சென்றார்
இல்லையே இங்கு மன்னன் என்றேரேது சொன்னான்.

3. அன்னை மரிமடியில் அமர்ந்திடு கர்த்தன் தன்னை
நண்ணரிய நூலோர் தூபம் பொன்னுடன் வெள்ளைப்போளம்
சென்னியில் வைத்தார் அங்கு அண்ணலார் அடிதொழுது
மண்ணினில் மன்னன்கண்டார் மதித்து வழிமாறிச் சென்றார்.

4. தஞ்சமாய் மனுக்குலத்தை தழைத்திட வருகை தந்தான்
அஞ்சியே பாவம் எம்மை அகன்றிட கருணை கொண்டான்
பஞ்சதாய் உள்ளந்தன்னை பக்குவ மாக்கிக் கொள்வோம்
வெஞ்சினம் மாற்றி நாமும் விரும்பியே ஓடிச்செல்வோம்.

— A. J. நவரத்தினம்
ஏழாலை தெற்கு

---

## வேத வினாவிடை

(முற்றொடர்ச்சி)

2-ம் பிரிவு

15. இடையருக்கு அறிவித்தது ஆர்?

தேவதூதன்.

16. தேவதூதன் அவர்களுக்கு என்ன அறிவித்தான்?

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார், பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றுஅறிவித்தான்.

17. அத்துடன் வேறென்ன விசேஷம் நடந்தது?

பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடன் சேர்ந்து உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லித் தேவனைத் துதித்தார்கள்.

18. அந்த இடையர் பாலகனைத் தரிசிக்கும்படி பெத்லகேம் ஊருக்குப் போனார்களா?

ஆம்; அவர்கள் உடனே புறப்பட்டுப் பெத்லகேம் ஊருக்குக்குப் போய், முன்னணையில் கிடத்தியிருந்த குழந்தையையும், மரியாளையும், யோசேப்பையும் கண்டார்கள்.

19. நாற்பதாம் நாள் அவரை எங்கே கொண்டுபோனார்கள்?

அவரைக் கர்த்தருக்கு என்று ஒப்புக்கொடுக்கும்படி எருசலேமிலுள்ள தேவாலயத்துக்குக் கொண்டு போனார்கள்.

20. அப்போது தேவாலயத்தில் என்ன நடந்தது?

பத்திமானாகிய சிமியோன் அவரைத் தன் கைகளில் ஏந்தித் தேவனை ஸ்தோத்தரித்தான்.

21 வேறே யார் அந்தப் பாலகனைத் தரிசிக்கும்படி போனார்கள்?

கிழக்கிலிருந்து சில சாஸ்திரிகள் போனார்கள்.

22. அந்தச் சாஸ்திரிகள் என்ன செய்தார்கள்?

அவர்கள் எருசலேமுக்குப் போய், யூதருக்கு இராசாவாய்ப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்று விசாரித்தார்கள்.

23. எருசலேம் நகரம் எங்கே இருக்கிறது?

அது கானான் தேசத்து தலைநகரம்.

24. ஏரோதுராசா சாஸ்திரிகளுக்கு என்ன சொன்னான்?

நீங்கள் போய்ப் பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரித்துக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்களென்று கபடமாய்ச் சொன்னான்.

25. ஏன் கபடமாய்ச் சொன்னான்?

யூதருடைய இராசாவாகிய இவர் பிறந்திருப்பதனால் தனது அரசாட்சிக்கு முடிவு வரும் என்று பயந்து அவரைக் கொன்று போட வேண்டும் என்ற எண்ணத்தினால் அப்படிச் சொன்னான்.

26. சாஸ்திரிகள் அந்தப் பிள்ளையைக் கண்டபின் திரும்பிப் போய் ஏரோது இராசாவுக்கு அறிவித்தார்களா?

இல்லை; அவனிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாம் என்று சொப்பனத்திலே தேவனால் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாய்த் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப் போனார்கள்.

27. அவர்கள் போன பின்பு என்ன நடந்தது?

கர்த்தருடைய தூதன் சொப்பனத்திலே யோசேப்புக்குக் காணப்பட்டு; ஏரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துத் தேசத்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே தங்குவாயாக என்றான்.

28. எகிப்து தேசம் எங்கே?

ஆபிரிக்காவின் வடகிழக்கில்.

(முற்றும்)

---

## Y. M. C. A. யின் வருடாந்த நத்தார் ஆராதனை

சண்டிக்குளியிலுள்ள Y. M. C. A. ஸ்தாபனத்தார் தமது வருடாந்த நத்தார் ஆராதனையை சென்ற வியாழக்கிழமை (18-12-80) வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடத்தினார்கள். இவ்வழிபாட்டில் நல்லூர் செ. ஜேம்ஸ் ஆலயத்துப் பாடகர் குழு, சண்டிக்குளி சென் ஜோன்ஸ் ஆலயத்துப் பாடகர் குழு, சோப்பாய் சென். மேரிஸ் ஆலயத்துப் பாடகர் குழு முதலிய குழுக்களினால் விசேட பாடல்கள் பாடப்பட்டன.

EDITORIAL

## A New Bethlehem

Legend has it that it was Saint Francis who created the first *creche.* In 1223, after his return to Assisi from the Holy Land, he decided on a dramatic way to bring the nativity message to the people of the Italian mountain village of Greccio.

On Christmas Eve, he celebrated Mass on an altar set up on a manger in a forest grotto, with an ox and an ass beside him.

He introduced no figures for the Holy Family. But, an onlooker inspired by the scene said " *Of Greccio there was made, as it were, a New Bethlehem* ".

For centuries all over the world, creche - makers have been re-creating the drama of the Nativity in the image of their environment. Some attempts have been reverent and others not so reverent.

Political activists in Poland have often used the creche, we note, as a means of political protest. A polish creche had often the figure of Herod, who was given the face of Ivan, the Terrible and during the Second World War, of Hitler.

In Naples, the creche-makers sought to make the setting so realistic ( in its material garb ) that they placed freshly cooked pieces of meat, sprinkled with wine, in front of the figures that the smell of the inn, may not be lost.

What shall be the image of the *New Bethlehem* which we as a Christian Church will strive to project this Christmas season ?

Enormous wealth surrounded by a sea of economic deprivation— a curious juxtaposition of the rich and the poor—that is the fundamental pain of Sri Lanka and many parts of Asia today.

Japanese Theologian, Kosuke Koyama, put the situation poignantly to the five hundred delegates who assembled in Melbourne in May this year for the World Consultation on *Mission* :-

" What kind of money is it that brought us to Melbourne from the four corners of the world ? Pure uncontaminated money ? Is there such money in the world today ?

The overwhelming majority of good Christians are busy living *a kind of spirituality which does not demand social justice.*

(Italics are ours)

No image of " a New Bethlehem " this Christmas will be meaningful without a focus on the commitment of the Christian Church to *people.*

More than 290 are reported (*A I Oct. 80*) to have been executed in Iran in two months—July and August this year,—without fair trials, *without the right of life* : Mass execution !!

Some 40,000 or more employees in Sri Lanka amd their dependents numbering some 250,000 have brighter hopes but little 'cheer' for 'Christmas'. They have been deprived of their means of livelihood for five and a half months, and have been struggling to keep their heads above the water in a mountain surf of inflation, hardly paralleled in our annals.

Masses are 'faceless' beings. "*The Word became Flesh and dwelt among us*" (St. John IV: 16) means, according to a modern theologian that the coming of Jesus Christ eliminates *facelessness.* " He creates community rather than mass ".

What a beautiful thought for an image of " a new Bethlehem " for the *Eighties! People* in many Asian countries today are indistinguishable from the *masses.*

We are employers and employees, landlords and tenants, majorities and minorities, capitalists and socialists, citizens and expatriates and even Christians and non - Christians. As *individuals,* we have a *facelessness* that is chilling.

God pitched his tent in the midst of this chilling atmosphere. That is what Incarnation, (the four syllabled theological term) is all about, in the language of the layman and we hope, we are not entirely wrong.

But the privilege of living with Christ in community carries with it a tremendous challenge. Aren't there millions of " pious Christians " today who benefit from the *status quo* of repressive regimes ?

The challenge this Christmas season is for the Christian Church to develop that form of " spirituality " which will enable it, to identify itself with the struggles of the *people.*

It is not without significance that St. Stephen's Day should fall on the Day after Christmas for that harsh contrast is present in the Christmas story itself.

## THE GOSPEL OF CHRISTMAS

by The Rev. (Dr.) James S. Mather

About two thousand years ago, when Jesus was born, Angels appeared in the sky, and announced it, saying that it was "*good tidings of great joy to all people* ". The Jewish Nation, for many centuries past, looked to the coming of a great Redeemer, who will save their nation, and place it, above all other Nations,—not save 'all people ', not save all other nations as well.

The word ' Gospel ' means God's spell, or news from God. Now, the question comes in the mind of many people, " In the Birth of Jesus, what is the "good tidings of great joy "? The first answer is, here we have *the good news of the universal love of God.* The Jews believed that God belonged to their nation only. Jehovah was looked upon by them as a National God, but He loved the whole world and all the people in it. The Bible says, " God so loved the world that He gave His only begotten Son... ", John 3 : 16. God so loved the people in this world, every Nation and Race included, that He came down, took human form and was born in Bethlehem as a poor baby ; and it is this, that is celebrated today, all over the world, almost in every country. The great Creator became a creative ; the Lord and Master became a servant and slave.

St. Paul wrote about this Incarnation, to the people in Corinth, " You know the Grace of the Lord Jesus Christ, that though He was rich, yet for your sake, He became poor, that ye through His poverty might be rich ", see II Corinthians, Chapter 8, verse 9. See Galatians 1 : 4 as well.

(1) The Birth of Jesus tells the world, "*God is a God of love*". This is happy and great news, that inspite of all the evils committed in rebellion against God, by man, a sinner, God loved all people and had deep concern for, and interest in, their happiness, peace and well-being. To us, who had gone away from Him and gone astray, this is certainly cheering good news.

(2) Christmas tells the world the happy news that God's Love was not an empty emotion, but it issued in action, as all true love did. God took human form and lived as Jesus Christ, showing the meaning and purpose of man's life. Many people live, not knowing who they are, or why they are here. Life here is not permanent: we are here for a short time only, and the Birth of Jesus reveals, the way we should live, and the goal we should ever have before us. In the end, the Lord sacrificed His life on the Cross, and revealed that we too have sacrifices to make. If the purpose of God for man's life should be fulfilled by us. " No sacrifice, No crown ".

(3) Christmas reveals to the world, God's Plan and Purpose for the world we live in. So the Holy Bible teaches, Human Peace is one family. A good family is one where its members live for one another, and ever seek the common good of the family. When Jesus was born, Angels sang, "Peace on earth, Goodwill toward men". All people will agree that the greatest need of our world is now, as before, peace, peace, peace. Men needs peace of mind, peace in his house, and peace everywhere else. But, for peace, man's heart and mind should change, and have love for peace. Right Relationship among all people, will come. when man's attitudes to other people changed. We should truely love other people to become one Family. The Lord's great Teachings on the Fatherhood of God and the Brotherhood of man give the solution to all the problems and difficulties we faced in our day to day life. The Human Race should live as one Family, and to do so, drastic changes should be made, in our political and other constitutions. But, before we do so, we should look upon God as our Father, and it is this, that Christmas proclaims to the whole world.

In wishing a Happy and Blessed Christmas to all readers of this message, I appeal that Christmas calls us to serve our country and fellowman, in the spirit of Christmas, making self-sacrifices, for the sake of others, for the sake of our country and people.

## Dual Citizenship for Sri Lankans in Britain

*Sri Lanka Review*, published in Surray is campaigning for dual citizenship for citizens of Sri Lanka residing in Britain.

A White - Paper on the New Nationality law in Britain allows immigrants who became British citizens to retain their original citizenship.

Sri Lanka's citizenship laws however do not have provision for dual citizenship.

In a petition to President Jeyawardene which is expected to be presented to him early next year, the Sri Lankan community in Britain points out that the provision for dual citizenship will strengthen, the bond of the Sri Lankans residing in Britain with their motherland.

The provision of such a facility will also be an incentive for many to return to Sri Lanka when they wish to do so. In the event of their coming, they will not be dependent on the state but be of independent means.

IN BRIEF

O *The Minister of Education* has decided to set apart one of the Teacher—Training Colleges in the country to train English teachers only.

O *Sri Lanka will receive a loan* of Rs. 850 Million from Britain for the Victoria Project and Rs. 900 Million from Saudi Arabia for the development of the Colombo Water and Sewage Project.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB / 8920 / 78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philp Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganathan Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 19th December, 1980.